செ.வெ.எண்.59 நாள்: 23.11.2019

**தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் மணிமண்டபம் கட்டுமான இறுதிக்கட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

---

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் மணிமண்டபம் கட்டும்பணிகள் பொதுப்பணித்துறை மூலம் நடைபெற்று வருகிறது. மணிமண்டபம் கட்டுமான இறுதிகட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.11.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி மூலம் 26.10.2018 அன்று தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் வீரபாண்டியபட்டிணம் கிராமத்தில் பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்படும் தற்போது மணிமண்டபம் 95 சதவிதம் பணிகள் நிறைவடைந்த நிலையில் வர்ணம் பூசும் பணிகள் மற்றும் சில பணிகள் இன்னும் இரண்டு வாரங்களில் முழு பணியும் நிறைவடையும். அதனைத்தொடர்ந்து. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் மணிமண்டபமானது விரைவில் திறக்கப்படும். மேலும், பொதுமக்கள் பயன்பெறுமாறு நூலக வசதி, கழிப்பிட வசதி, பூங்கா வசதி,குடிநீர் வசதி, ஆகிய அத்தியாவசிய வசதிகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டுகள் குறித்து தகவல் பலகைகளாக கல்வெட்டுகள் வைக்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக திருச்செந்தூர் வட்டம் வீரபாண்டியபட்டிணம் கிராமத்தில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கடல் அரிப்பை தடுப்பதற்காக தூண்டில் வளைவு அமைக்கப்பட உள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்ச்சியில் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், மீன்வளத்துறை இணை இயக்குநர் திருமதி.சந்திரா, தந்தி கல்விக்குழும மேலாளர் திரு.வெங்கட்ராமராஜன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.கணேசன், உதவி செயற்பொறியாளர் திரு.கணேசன், உதவி இயக்குநர் திருமதி.வைலா, வட்டாட்சியர் திரு.ஞானராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சுடலை, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) திரு.ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.